# ஆகஸ்ட் - 31 - வியாழன்

## “மானிடரே! மீண்டும் புழுதியாகுங்கள் என்கின்றீர்” திபா -90:3

## முதல் வாசகம்: 1 தெசலோனி 3 : 7 - 13

ஆகையால், அன்பர்களே! எங்கள் இன்னல் இடுக்கண்கள் நடுவிலும் உங்களது நம்பிக்கையைக் கண்டு உங்களால் நாங்கள் ஆறுதல் அடைகிறோம்.நீங்கள் ஆண்டவரோடுள்ள உறவில் நிலைத்திருக்கிறீர்கள் என்று அறிந்ததும் எங்களுக்கு உயிர் வந்தது.நம் கடவுள் முன்னிலையில் உங்களால் நாங்கள் பெருமகிழ்ச்சி அடைகிறோம். அதற்காக உங்கள் பொருட்டு எத்தகைய நன்றியை அவருக்குக் கைம்மாறாகக் காட்ட இயலும்?நாங்கள் உங்கள் முகத்தைக் காணவும், உங்கள் நம்பிக்கையில் குறைவாகவுள்ளவற்றை நிறைவாக்கவும், அல்லும் பகலும் மிகுந்த ஆர்வமுடன் மன்றாடுகிறோம்.இப்பொழுது நம் தந்தையாம் கடவுளும், நம் ஆண்டவராம் இயேசுவும் உங்களிடம் வருவதற்கான வழியை எங்களுக்குக் காட்டுவார்களாக!உங்கள் மீது நாங்கள் கொண்ட அன்பு வளர்ந்து பெருகுவதுபோல, நீங்கள் ஒருவர் ஒருவருக்காகவும் எல்லாருக்காகவும் கொண்டுள்ள அன்பையும் ஆண்டவர் வளர்த்துப் பெருகச் செய்வாராக!இவ்வாறு நம் ஆண்டவர் இயேசு தம்முடைய தூயோர் அனைவரோடும் வரும்பொழுது, நம் தந்தையாம் கடவுள்முன் நீங்கள் குற்றமின்றித் தூய்மையாக இருக்குமாறு அவர் உங்கள் உள்ளங்களை உறுதிப்படுத்துவாராக!

**பதில்பாடல் :** உமது பேரன்பால் நிறைவளியும். நாங்கள் களிகூர்ந்து மகிழ்ந்திடுவோம்

## நற்செய்தி: மத்தேயு 24 : 42 - 51

அக்காலத்தில் இயேசு கூறியதாவது : விழிப்பாயிருங்கள் ஏனெனில் உங்கள் ஆண்டவர் எந்த நாளில் வருவார் என உங்களுக்குத் தெரியாது.இரவில் எந்தக் காவல் வேளையில் திருடன் வருவான் என்று வீட்டு உரிமையாளருக்குத் தெரிந்திருந்தால் அவர் விழித்திருந்து தம்வீட்டில் கன்னமிடவிடமாட்டார் என்பதை அறிவீர்கள்.எனவே நீங்களும் ஆயத்தமாய் இருங்கள். ஏனெனில் நீங்கள் நினையாத நேரத்தில் மானிட மகன் வருவார்.”தம் வீட்டு வேலையாள்களுக்கு வேளாவேளை உணவு பரிமாறத் தலைவர் அமர்த்திய நம்பிக்கைக்கு உரிய வரும் அறிவாளியுமான பணியாளர் யார்?தலைவர் வந்து பார்க்கும் போது தம் பணியைச் செய்துகொண்டிருப்பவரே அப்பணியாளர். அவர் பேறு பெற்றவர்.அவரைத் தம் உடைமைகளுக்கெல்லாம் அதிகாரியாக அவர் அமர்த்துவார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.அப்பணியாள் பொல்லாதவனாய் இருந்தால், தன் தலைவர் வரக் காலந்தாழ்த்துவார் எனத் தன் உள்ளத்தில் சொல்லிக் கொண்டு,தன் உடன் பணியாளரை அடிக்கவும் குடிகாரருடன் உண்ணவும் குடிக்கவும் தொடங்குவான்.அப்பணியாள் எதிர்பாராத நாளில், அறியாத நேரத்தில் அவனுடைய தலைவர் வருவார்.அவர் அவனைக் கண்டந்துண்டமாய் வெட்டி வெளி வேடக்காரருக்கு உரிய இடத்திற்குத் தள்ளுவார். அங்கே அழுகையும் அங்கலாய்ப்பும் இருக்கும்.“ என்றார்

**தியானம்:** இன்றைய நற்செய்தியில் இறைமகன் இயேசு தமது வருகைக்காக “விழிப்பாயிருங்கள்” என எச்சரிக்கை விடுத்து, எமது வாழ்வில் என்ன விதமான துன்பங்கள், சோதனைகள் எதிர் நோக்கி வந்தாலும் தம்மை விட்டு விலகாது நிலைத்திருக்க வேண்டுமெனவும் அறிவுறுத்துகின்றார். அதே வேளையில் இன்றைய நற்செய்தியை நாம் ஆழமாகத் தியானிக்கும்போது தமது பணியை நிறைவேற்ற இவ்வுலகில் எமது உதவியினை இறைமகன் இயேசு பெரிதும் எதிர்பார்க்கின்றார் என்ற உண்மையும் எமக்கு நன்குபுலப்படுகின்றது. எமது முழுமையான அர்ப்பணிப்பு இல்லாவிட்டால் இறைமகனது விண்ணரசின் மறு வருகை ஒரு முனையிலிருந்து மறு முனை வரை அறிவிக்க முடியாத ஒன்றாகிவிடும். ஏனெனில் இவ்வுலகில் இறைமகன் இயேசுவின் உடல் ரீதியான பிரசன்னம் மறைந்திருப்பதனால் அவரது கைகளாக, கால்களாக, வாயாக, நாவாக எம்மைப் பாவிக்க விரும்புகின்றார். எம்மைப் படைத்த இறைவன் எங்கள் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறுவிதமான ஆற்றல்களையும் திறமைகளையும் தந்தது மட்டு மல்லாது தமது மகிமைக்காக அவற்றினை நாம் பயன்படுத்த விரும்புகின்றார். எமது திறமைகளை அல்லது ஆற்றல்களை நாம் இறைமகிமைக்காக பயன்படுத்தினால் அவரது நம்பிக்கைக்குரிய பணியாளராக இறுதி நாளில் ஏற்றுக் கொள்ளப்படுவோம். மாறாக, நான் திருப்பலிக்காக கோவிலுக்குப் போகவேண்டுமா? நற்செய்திப் பணிகளில் பங்குபற்றவேண்டுமா? எதற்காக இவை எல்லாம் என வாளாவெட்டியாக இருப்போமாயின் நாம் அறிந்திராத இறுதிநாளில் இருளில் வெளியே தள்ளப்படுவோம் எனவும் நற்செய்தி எச்சரிக்கின்றது. எனவே, இனியும் தாமதேன்? அனுவுக்குள்ளே அசைந்தாடும் இறைவனின் படைப்புக்களாகிய நாம் அவரோடு சேர்ந்து அசைந்தாட வேண்டும். இறைமகன் இயேசுவின் கருவியாக பயன்படுத்த நாமும் அவர் திருப்பாதம் எம்மை ஒப்படைப்போம். எமது திறமைகளை, ஆற்றல்களை எம்மாலே இனம்காண முடியாவிட்டாலும் இறைபணியில் ஈடுபடும் அடுத்தவர்களுக்கு ஒத்துழைப்பவர்களாக இராவிடினும், இடையூறு கொடுக்காதிருக்க முயலுவோம். ஏனெனில், எமது ஒவ்வொரு செயல்களையும் உன்னதத்தில் வீற்றிருப்பவர் உற்று அவதானிப்பவராக என்றும் விழிப்போடு இருக்கின்றார் என்பது மட்டும் உண்மை.